DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE IVth ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, UDUMALPET

**Sessions CASE No : 126/2016**
Deposition of Witness for : **P.W.24**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜன் | Calling | தலைமைக்காவலர், |
| Father Name | : பாஸ்கரன் | Taluk | காங்கேயம் |
| Age | : 46 | District | திருப்பூர் |

எதிரி – 1, 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. BNSS 355 ன் படி மனுதாக்கல் செய்ததன் பேரில் மனு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of **20.02.2025**

முதல் விசாரணை

நான் தற்போது வெள்ளக்கோவில் காவல் நிலைய தேசிய நெடுஞ்சாலை ரோந்து வாகனத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.02.2015 அன்று அலங்கியம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது அன்று அலங்கியம் காவல் நிலைய குற்ற எண். 64/2015 சட்டப்பிரிவு 302 r/w 201 IPC வழக்கில் இறந்துபோன பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் என்பவரை பிரேத பரிசோதனைக்காக காலை 8 மணிக்கு கடவுச்சீட்டு பெற்று தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் என்பவர் பிரேதத்தின் மீது காலை 10 மணிக்கு தாராபுரம் காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்தபோது அவருக்கு உதவியாக இருந்தும், பிறகு பிரேத விசாரணை முடிந்தபின்பு பிரேதத்தையும் பிரேத பரிசோதனை செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் பெற்று அவற்றை தாராபுரம் அரசு மருத்துவமனை அலுவல் மருத்துவ அதிகாரியிடம் கொடுத்து பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தும் பிரேத பரிசோதனை முடிந்தபின்பு உடல் மீது இருந்த உடமைகளை சேகரம் செய்து பிரேதத்தை அவர்களின் குல வழக்கப்படி தகனம் செய்வதற்காக அவரின் தந்தை பஞ்சலிங்கம்

S/o.திருமூர்த்தி என்பவரிடம் ஒப்படைத்து அத்தாட்சி பெற்றும் 05.02.2015 அன்று இரவு 20.30 மணிக்கு அலுவல் முடித்து தனியறிக்கையுடன் தாராபுரம் காவல் ஆய்வாளிரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

05.02.2015 அன்று காலை 10 மணி முதல் 1 மணி வரை மூன்று மணி நேரம் பிரேத விசாரணை நடைபெற்றது. 5 பஞ்சாயத்தார்களை ஆய்வாளர் விசாரித்தார். நான் தள்ளி நின்றேன்.

2– ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

1–ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை தனதாக ஒப்புக்கொள்கிறார்.

Taken down to my direction in my presence and hearing, and under my personal direction and superintendance and read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-C.Rajalingom,B.A.,B.L.,
IV[th] Additional District and Sessions Judge,
Udumalpet.